DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Name : சாந்தி | Father/Husband Name : கவிராஜ் S ராஜ்குமார் |
| Age : 54 | Village : சாத்தான்குளம் |
| Taluk : | Calling : |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 Dec 2024
Accused present

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

16. நான் தாக்கல் செய்துள்ள மனுவிற்கும், முதல் விசாரணை வாக்குமூலத்திற்கும் வேறுபாடுகள் இருக்கிறது என்றால் இல்லை. இந்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுப்படி என்னுடைய கணவரிடம் இருந்து என்னுடைய இடைக்கால வாழ்க்கை பொருளுதவி தொகையும், வழக்கு செலவு தொகையும் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான்.

17. நான் கடந்த வாய்தாவிற்கு மறுநாளான 04.12.2024 ஆம் தேதி என்னுடைய கணவர் மீது சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவை யார் தயார் செய்தார் என்றால் என்னுடைய வழக்கறிஞர், நான் சொன்னதை புகாராக தயார் செய்து கொடுத்தார். நான் இந்த வழக்கில் கூறியுள்ள விபரங்களை தான் அந்த புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, இடைக்கால நிவாரணமும் பெற்றுக் கொண்டுள்ள நிலையில் காவல் நிலையத்தில், நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள அதே சங்கதிகளை கூறி மனு கொடுத்துள்ளது தவறு என்றால் என்னுடைய கணவர் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டார் என்பதை தற்போது தான் ஒப்புக்கொண்டுள்ளதால் புகார் கொடுத்தேன்.

18. என்னுடைய கணவர் எவ்விதமான சமுதாய சடங்குகளையும் செய்து, யாரையும் இரண்டாவது முறையாக திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்ற பொறுமையை என்னால் நிரூபிக்க முடியாது என்றால் அவர் திருமணம் செய்து கொண்டது எனக்கு தெரியாது என்பதால் அதை என்னால் நிரூபிக்க முடியாது. என்னுடைய கணவருக்கு 16 வயதிற்கு மேல் உள்ள இரண்டு மகன்கள் இருக்கிறார்கள் என்றால் அதை கேள்விப்பட்டேன். அந்த இரண்டு மகன்களையும் நான்தான் தூக்கி வளர்த்தேன் என்றால் இல்லை. என்னுடைய கணவருக்கு விபரம் தெரியக்கூடிய வகையில் இரண்டு மகன்கள் இருப்பதால், அந்த இரண்டு மகன்களின் தாயாரை தவறாக எதிருரையில் குறிப்பிட்டால், அது அந்த இரண்டு மகன்களின் எதிர்கால வாழ்க்கையை பாதிக்கும் என்பதால் அந்த தவறான வார்த்தையை என்னுடைய கணவர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் இந்தக்

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.12.10 20:13:59 +0530

கேள்விக்கு என்ன பதில் கூற வேண்டும் என்று தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

19. மேல சாத்தான்குளத்தில் உள்ள என்னுடைய அப்பாவிற்கு பாத்தியப்பட்ட இடத்தின் சர்வே நம்பர் எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் கூற முடியும். அது சாலையில் இருந்து எந்த திசையில் இருக்கிறது என்பது எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். அந்த இடம் சாலையில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதும் எனக்கு தெரியாது என்றால் அந்த இடத்தை நான் ஒருமுறைதான் பார்த்துள்ளேன், அதனால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த இடம் சாலைக்கு தெற்கு திசையில், சுமார் பத்து தெரு தள்ளி இருக்குமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

20. சாலை விரிவாக்கத்திற்காக அந்த இடத்தை அரசாங்கம் எடுக்கப் போகிறது என்று கூறி, அந்த இடத்தை விற்பனை செய்வதற்காக என்னை என்னுடைய கணவர் தூண்டியதாக நான் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு கூறிதான் என்னுடைய கணவர் என்னிடம் பவர் ஆவணம் பெற்றார். அந்த இடத்திற்கு யாரெல்லாம் பவர் ஆவணம் எழுதிக் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் நானும் என்னுடைய சகோதரிகளும் எழுதிக் கொடுத்ததாக நினைக்கிறேன், ஆண்டுகள் ஆகிவிட்டதால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எங்களுடைய இடத்தை எங்களை ஏமாற்றி பவர் வாங்கிக் கொண்டதாக என்னுடைய கணவர் மீது நானும் என்னுடைய சகோதரிகளும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன், என்னுடைய கணவர் உள்ளூர் வழக்கறிஞர் என்பதால் அவருக்கு எதிராக புகாரை எடுக்க மாட்டோம் என்று போலீசார் கூறிவிட்டார்கள். இந்த விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. அந்தப் புகார் மனு எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்பது எனக்கு நினைவிருக்கிறதா என்றால் இல்லை. எங்களை ஏமாற்றி என்னுடைய கணவர் சொத்தை விற்பனை செய்ய தூண்டியதாக என்னுடைய மருமகன் செல்வ சுரேஷ் கூறியதன் பெயரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

21. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் முதல் விசாரணையில், என்னுடைய வளர்ப்பு மகளின் திருமணத்திற்கு பிறகு தான் நானும் என்னுடைய கணவரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டு வரை நானும் என்னுடைய கணவரும் சேர்ந்துதான் வாழ்ந்து வந்தோம் என்றால் 2019 ஆம் ஆண்டு வரை நாங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்தோம், என்னுடைய கணவருக்கு தவறான பழக்கம் இருக்கிறது என்பது எனக்கு 2019 ஆம் ஆண்டு தெரியவந்ததிலிருந்து எங்கள் இருவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது.

22. எனக்கு தெரியாமல் என்னுடைய கணவர் திருச்செந்தூரில் உள்ள கிருஷ்ணாநகரில் அவருடைய இரண்டாவது மனைவியுடன் குடும்பம் நடத்தியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவரின் இரண்டு மகன்களும் திருச்செந்தூரில் உள்ள காஞ்சி சங்கரா பள்ளியில் படித்ததால் என்னுடைய கணவர் திருச்செந்தூரில் குடியிருந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், என்னுடைய கணவர் திருச்செந்தூரில் உள்ள அவருடைய அலுவலகத்திற்கு செல்வதாக தான் கூறிச்

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.12.10 20:14:09 +0530

செல்வார். என்னுடைய கணவரின் இரண்டு மகன்களின் தாயாரான முத்துமாரி என்பவர் எனக்கு திருச்செந்தூரில் இருந்து உணவு தயாரித்து என்னுடைய கணவர் மூலமும் அல்லது என்னுடைய கணவரின் வழக்கறிஞர் நண்பர்கள் மூலமும் கொடுத்து அனுப்புவார் என்றால் இல்லை. நான், எனக்கு என்ன என்ன உணவு பொருள் வேண்டும் என்று ஒரு தாளில் எழுதிக் கொடுத்து அனுப்பினேன் என்றால் இல்லை.

23. சுமார் 4, 5 ஆண்டுகளாக மேற்படி முத்துமாரி தான் என்னை மனநல சிகிச்சை மருத்துவரான தூத்துக்குடியில் உள்ள மருத்துவர் ஸ்ரீராமிடம் அழைத்துச் சென்றார் என்றால் மருத்துவர் ஸ்ரீராம் என்பவரை யார் என்று எனக்கு தெரியாது. எங்களுடைய வளர்ப்பு மகள் கோமதியை சேலத்தில் உள்ள சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் வழக்கறிஞருக்கு யார் படிக்க வைத்தார் என்றால் நானும் என்னுடைய கணவரும் படிக்க வைத்தோம். அங்கு என்னுடைய மகளை பார்ப்பதற்கு நான், முத்துமாரி மற்றும் அவருடைய இரண்டு குழந்தைகளும் தான் செல்வோம் என்றால் நான் எப்பொழுதும் தனியாக திருச்செந்தூரிலிருந்து அரசு பேருந்தில் ஏறி செல்வேன். நான் தனியாக செல்வேன் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

24. என்னை அடியாட்களை வைத்து மிரட்டினார்களா என்றால் இல்லை. ஆனால், என்னுடைய கணவர் என்னை அடியாட்களை வைத்து கொலை செய்து விடுவதாக மிரட்டினார். நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாரின் பணத்தை வைத்து தான் முத்துமாரியின் பெயரில் என்னுடைய கணவர் சொத்து வாங்கியதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிலிருந்து ரூபாய் 2 லட்சம் மதிப்புள்ள பொருட்களை என்னுடைய கணவர் எடுத்துச் சென்று விட்டார் என்று நான் கூறுவது தொடர்பாக என்னுடைய வீட்டிலிருந்து ரூபாய் 2 லட்சம் மதிப்புள்ள பொருட்களை என்னுடைய கணவர் எடுத்துச் சென்று விட்டார் என்று நான் கூறுவது தொடர்பாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் என்னுடைய கணவர் வேறொரு சாவியை வைத்து என்னுடைய பொருட்களை எடுத்துச் சென்றுவிட்டார் என்று புகார் கொடுத்தால் அசிங்கம் என்பதால் நான் புகார் கொடுக்கவில்லை. இந்த விபரத்தை நான் மனு மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். நான் கூறியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

25. என் பெயரிலும் என்னுடைய கணவர் பெயரிலும் கூட்டாக உள்ள சாத்தான்குளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய கணவர் ரூபாய் ஒரு லட்சத்தை எடுத்தது தொடர்பாக நான் அந்த வங்கிக்கு ஸ்டாப் பேமெண்ட் கொடுத்தேன் என்றால் சரிதான், ஆனால், நான் ஸ்டாப் பேமெண்ட் கொடுத்த பிறகும் என்னுடைய கணவருக்கு அந்த பணத்தை, என்னுடைய கணவர் அந்த வங்கியின் சட்ட ஆலோசகர் என்ற முறையில் கொடுத்து விட்டார்கள். என்னுடைய கணவர் லாக்கரிலிருந்த 110 பவுன் நகையை எடுத்ததாக நான் கூறும் நிலையில், அது தொடர்பாக நான் வங்கிகிலோ அல்லது காவல் நிலையத்திலோ புகார் கொடுத்தேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், ஆனால், என்னுடைய கணவர் உள்ளூர் வழக்கறிஞர் என்பதால் அவர் மீது புகாரை எடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டார்கள். வங்கியில் இது தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கவில்லை.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2024.12.10 20:14:13 +0530

26. தற்போதும் என்னுடைய கணவர் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். ஆகையால், கடந்த வாரம் நான்காம் தேதி என்னுடைய கணவர் மீது நான் கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். முதலில் நான் புகார் கொடுக்க சென்றபோது நான் மட்டும் சென்றேன் அதனால் வாங்க மாட்டேன் என்று கூறிவிட்டார்கள், தற்போது வழக்கறிஞர் மூலம் சென்று புகார் கொடுத்தேன் அதனால் வாங்கிக் கொண்டார்கள்.

27. என்னுடைய கணவர் மாதம் ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வரை வருமானம் ஈட்டுவதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. அது தொடர்பாக நான் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சாத்தான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். அது சொந்த வீடு என்றால் சரிதான். என்னுடைய கணவர் எங்கு கூடியிருக்கிறார் என்றால் சாத்தான்குளத்தில் உள்ள விசாலாட்சி அம்மன் கோவில் அருகே குடியிருந்து வருகிறார், அந்தத் தெரு பெயர் எனக்கு தெரியாது. அது சொந்த வீடா அல்லது வாடகை வீடா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கணவருக்கு ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் கிட்னி பிரச்சனை இருக்கிறது என்றால் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் இருப்பது மட்டும் தெரியும்.

28. நானும் என்னுடைய கணவரும் 32 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்து வந்த காலத்தில் நான் என்னுடைய கணவருக்கு எந்த பணிவிடையும் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. என்னால் அவ்வாறு வேலைகளை செய்ய முடியாது என்பதால்தான் அந்த வேலைகளை செய்ய வேலைக்கு ஆள் வைத்துக் கொண்டோம் என்றால் இல்லை.

29. என்னுடைய மனுவில் கூறியுள்ள 166 பவுன் நகைக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதற்கு ஆவணம் எதுவும் கிடையாது. நான் வைத்திருந்த நகைகளில் எவ்வளவு நகைகளை லாக்கரில் வைத்திருந்தேன் என்றால் நான் மொத்தம் 150 பவுனுக்கு மேல் நகை வைத்திருந்தேன், அந்த நகைகளில் நான் போட்டு இருந்த தோடு, செயின் மற்றும் வளையல் போக மற்ற நகைகளை நான் லாக்கரில் வைத்திருந்தேன். நான் சாத்தான்குளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வைத்திருந்த ஜாயிண்ட் லாக்கரை க்ளோஸ் செய்து விட்டு தனியாக ஒரு லாக்கர் வைத்திருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய கணவர் என்னிடம் லாக்கர் சாவியை தரும்போது அதிலிருந்து 110 பவுன் நகையை எடுத்துக்கொண்டு தந்ததால் நான் பயந்து போய் தனியாக லாக்கர் ஓபன் செய்தேன். நான் கூறுவது பொய் என்றாலும், என்னை என்னுடைய மருமகன் ஏமாற்றுவதற்காக தனியாக லாக்கர் ஓபன் செய்ய செய்தார் என்றாலும் சரியல்ல.

30. என்னுடைய கணவர் என்னிடமிருந்து எடுத்துக்கொண்டதாக கூறும் ரூபாய் 73,50,000/- ஐ என்னுடைய கணவர் வங்கி மூலம் எடுத்தாரா, அல்லது என்னிடமிருந்து புடுங்கிக் கொண்டாரா என்றால் அந்த பணம் எங்களுடைய ஜாயிண்ட் அக்கவுண்டில் இருந்தது. வங்கி ஆவணங்களான ஏடிஎம், செக் புக் மற்றும் பாஸ்புக் அனைத்தும் என்னுடைய கணவரிடம் தான் இருந்தது. அதிலிருந்து அவர் பணத்தை எடுத்துக் கொண்டார். எது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நகை மற்றும் பணம் தொடர்பாகத்தான் நான் புகார் கொடுக்க சென்றேன், அந்த புகாரை தான்,

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.12.10 20:14:17 +0530

என்னுடைய கணவர் உள்ளூர் வழக்கறிஞர் என்று கூறி போலீசார் வாங்க மறுத்துவிட்டார்கள்.

31. என்னுடைய கணவர் எங்களுடைய ஜாயிண்ட் அக்கவுண்டில் இருந்து என்னுடைய பணம் ரூபாய் 73 லட்சத்து 50 ஆயிரத்தை எடுத்துக் கொண்டார் என்பதை நிரூபிக்க வங்கி அதிகாரிகளை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் என்னுடைய கணவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு சட்ட ஆலோசகராக பல ஆண்டுகளாக இருப்பதால் வங்கி அதிகாரிகள் உண்மையை சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை, ஆகையால் அவர்களை என்னால் சாட்சியாக விசாரிக்க முடியாது. என்னுடைய கணக்கில் ரூபாய் 73 லட்சத்து ஐம்பதாயிரம் இருந்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1999 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை உள்ள என்னுடைய வங்கி கணக்கு அறிக்கையை பார்த்தால் அந்த வங்கி கணக்கில் ரூபாய் 73 லட்சத்து 50 ஆயிரம் எடுக்கப்பட்டதாக கூறுவது உண்மையா என்பது தெரியவரும் என்றால் அந்த காலகட்டத்தில் வங்கியில் இருந்து ரூபாய் 30 லட்சம் மட்டும்தான் எனக்கு வந்தது. ரூபாய் 73 லட்சத்து 50 ஆயிரம் என்று நான் கூறுவது சொத்துக்களை விற்பனை செய்ததில் இருந்து வந்த பணத்தையும் சேர்த்து கூறுகிறேன்.

32. நான் கூறும் மேற்படி 30 லட்சமும் பொய்யானது என்றால் சரியல்ல. 1999 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை உள்ள வங்கி கணக்கு அறிக்கையை பார்த்தால் எவ்வளவு எனக்கு வந்துள்ளது என்பது தெரியவரும் என்றால் சரிதான். என்னுடைய மகளின் திருமணத்தை நானே நடத்தி வந்ததாக மனுவில் கூறிவிட்டு, அதே மனுவில் என்னுடைய கணவர் திருமண செலவுகளை பார்த்ததில் அவருக்கு கடன் ஏற்பட்டு விட்டதாக கூறி வீட்டை விற்பனை செய்ய கூறியதாக, முன்னுக்குப் பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் நானும் என்னுடைய கணவரும் சேர்ந்த தான் திருமணத்தை நடத்தினோம், அதனால் என்னுடைய கணவருக்கு கடன் வந்து விட்டதாக கூறி வீட்டை விற்பனை செய்யக் கூறினார்.

33. அந்த திருமணத்திற்கு என்னுடைய கணவர் யாரிடம் கடன் வாங்கினார் என்பதை என்னால் கூற முடியாது என்றால் யாரிடம் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் என்னிடம் வீட்டை விற்பனை செய்யுமாறு கூறியதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய மனப்பிறழ்ச்சி பிரச்சனை காரணமாக என்னுடைய கணவரின் வங்கிக் கணக்கோடு என்னுடைய பெயரை சேர்த்துக் கொண்டார்கள் என்றால் இல்லை. முதலூர் கனரா வங்கியில் எனக்கு தனி வங்கி கணக்கு இருக்கிறதா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி வங்கியில் எனக்கு வங்கி கணக்கு இருக்கிறது என்றாலும், அந்த வங்கி கணக்கை என்னால் தனியாக இயக்க முடியவில்லை என்பதால் அது இன்று வரை செயலற்ற நிலையில் இருக்கிறது என்றாலும் சரியல்ல, என்னுடைய கணவரை நம்பி கொடுத்தேன்.

34. என்னுடைய மகளின் திருமணத்திற்கு நான் எவ்வளவு நகை போட்டேன் என்றால் 20 பவுன் நகை போட்டேன். என்னுடைய மகளுக்கு என்னுடைய மாமியார் நகை போட்டாரா என்றால் 35 பவுன் நகை போட்டால், என்னுடைய கணவரின் இரண்டாவது மனைவிக்கு தெரிந்தால் நகையை போட விடமாட்டார் என்று கூறி அந்த நகையை என்னுடைய மாமியாரை நேரடியாக போட்டார். அந்த நகையை நான் வாங்கியதற்கு என்னிடம் ரசித்து இருக்கிறதா

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.12.10 20:14:21 +0530

என்றால் அது வாங்கிய நகை அல்ல, நான் அணிந்திருந்த நகை மற்றும் நகை சீட்டு மூலம் வாங்கியதாகும், மேலும் எனக்கு நன்கொடை மூலம் வந்த நகைகளையும் சேர்த்து போட்டேன்.

35. என்னுடைய கணவர் என்னுடைய வீட்டிற்கு வந்து என்னுடன் சேர்ந்து வாழ தற்போதும் தயாராக இருக்கிறார் என்றால் அவர் என்னை கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளதால் நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.12.10 20:14:25 +0530
Judicial Magistrate(FAC), Sathankulam.